நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பருப்பு ஏற்றுமதிக்கு தடை நீட்டிப்பு**

First Published : 25 Mar 2011 12:00:00 AM IST

புது தில்லி, மார்ச் 24: பருப்பு வகைகள் ஏற்றுமதி மீதான தடையை மத்திய அரசு மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து உத்தரவிட்டுள்ளது. அதிகரித்து வரும் தேவையை சமாளிக்கும் விதமாக 34 லட்சம் டன் உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டி இருக்கும் என்று அயல்நாட்டு வர்த்தகத்திற்கான இயக்குனரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயறு வகை தானியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு கடந்த 2006 ஜுன் மாதம் முதல் விதிக்கப்பட்டிருந்த தடை இந்த மாதம் 31-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இருப்பினும் இயற்கை வேளாண் முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பயறு வகைகள் 10 ஆயிரம் டன் வரை ஏற்றுமதி செய்ய தடையில்லை என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2011-12-ம் ஆண்டில் பயறு வகை உற்பத்திக்கான இலக்கு 1.6 கோடி டன் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் பயறு வகை தேவைக்கான திட்டக்கமிஷனின் எதிர்பார்ப்போ 1.9 கோடி டன். எனவே இந்த பற்றாக்குறையை சரிசெய்யும் வகையில் ஏற்றுமதி மீதான தடை மேலும் ஓராண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**விலைவாசி உயர்வால் விழிபிதுங்கும் சிறுதொழில்**

ஆ. சண்முகவேலாயுதன்

First Published : 25 Mar 2011 02:50:08 AM IST

விலைவாசி உயர்வு உலக அளவில் மிகப்பெரிய தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. எகிப்திலும், டுனீசியாவிலும் ஆட்சி மாற்றத்துக்கான மக்கள் போராட்டத்துக்கு விலைவாசி உயர்வும் ஒரு காரணம்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில், அடித்தட்டு மக்கள் உணவுப் பொருள்களுக்கும், தங்குமிடத்துக்கும் ஏற்படுகிற செலவைச் சமாளிக்க முடியாமல் சொல்லொணாத் துன்பத்துக்குள்ளாகி வருகின்றனர். இப்படி அடித்தட்டு மக்களையும் வாட்டி வதைக்கும்

விலைவாசி உயர்வால் அவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்காவது லாபம் உண்மையில் கிடைக்குமென்றால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நமக்கும் ஆறுதலாக இருந்திருக்கும். ஆனால், விவசாயிகளுக்கு அவர்களின் வேளாண் பொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கவில்லை. இடைத்தரகர்கள், பதுக்கல்காரர்கள் மட்டுமே பலன் அடைகின்றனர்.

இப்படி அடித்தட்டு மக்களையும், விவசாயிகளையும் வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வால் சிறுதொழில்களும் கிட்டத்தட்ட சமமான அளவுக்கு அவதிப்படுகின்றன.

நேரடிப் பாதிப்பு: சிறுதொழில் முனைவோர் பெரிய நிறுவனங்களுக்கு உதிரி பாகங்கள் உற்பத்தி செய்து தருகின்றனர். ஒரு சிலர் நுகர்வுக்குத் தயாராக உள்ள முழுமையான பொருள்களாகத் தயாரித்துச் சந்தைப்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான மூலப்பொருள்கள் இரும்பு, அலுமினியம், காப்பர் (தாமிரம்), துத்தநாகம் போன்றவைகளாகும். இந்தியாவில் இந்த மூலப்பொருள்களைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்கள் ஒற்றைப்படை எண்ணிலேயே உள்ளன.

இரும்புப் பொருள்களை எடுத்துக்கொண்டால் அரசு நிறுவனங்களான "செயில்', ஆர்.எஸ்.என்.எல்., டாடா, ஜிண்டால், எஸ்ஸôர் ஸ்டீல் போன்றவைகளாகும்.

அலுமினியத்தை எடுத்துக்கொண்டால் அரசு நிறுவனமான நால்கோ, வேதாந்தா குழுமத்துக்குச் சொந்தமான மால்கோ, பால்கோ மற்றும் இண்டால்கோ, ஹிண்டால்கோ ஆகிய ஐந்து நிறுவனங்களில் மூன்று தனியார் உரிமையாளர்களால் நடத்தப்படுகின்றன.

தாமிரத்தை எடுத்துக்கொண்டால் ஸ்டெர்லைட், இந்துஸ்தான் காப்பர், பிர்லா குழுமம் ஆகிய மூன்று நிறுவனங்கள்தான் உற்பத்தி செய்து வருகின்றன.

அதேபோல், துத்தநாகத்தைப் பொறுத்தமட்டில் இரண்டே இரண்டு நிறுவனங்கள்தான் உற்பத்தி செய்கின்றன. இரும்பு பொருள்களின் விலையை முன்பு அரசு கட்டுப்படுத்தி வந்தது. அரசுக் கூட்டுக் கமிட்டியின் முன் அனுமதி பெற்றே விலையை உயர்த்த வேண்டும். ஆனால், இன்று எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் நினைத்த பொழுதெல்லாம் உற்பத்தியாளர்கள் விலையைக் கூட்ட அரசு அனுமதித்துவிட்டது.

அலுமினியம், காப்பர், துத்தநாகம், டின் போன்ற மூலப்பொருள்களின் விலையை லண்டன் உலோக அமைப்பு விலையின் அடிப்படையில் நிர்ணயிக்கின்றனர். குறிப்பாக, காப்பர் ஒவ்வொரு நாளும் ஒரு விலை என்பதால் சிறுதொழில் நிறுவனங்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2010 ஜூலை முதல் 2011 பிப்ரவரி வரை அலுமினியம் 31 சதவீதமும், காப்பர் 55 சதவீதமும், ஈயம் 55 சதவீதமும், துத்தநாகம் 39 சதவீதமும், இரும்பு 25 முதல் 30 சதவீதமும் விலை உயர்ந்துள்ளன.

அலுமினியம் மற்றும் இரும்பு ஆகிய இரண்டும் இந்தியாவில் கிட்டத்தட்ட தேவைக்குப் போதுமான அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள் இந்திய மண்ணிலேயே தோண்டி எடுக்கப்படுகின்றன. அதற்கான குத்தகைத் தொகை அல்லது ராயல்டி தினசரி மாறுவதில்லை.

அதேபோல், தேவையான மின்சாரத்துக்கும் அதற்குரிய கட்டணமும் அடிக்கடி மாறுவதில்லை. தொழிலாளர் கூலியும் நாள்தோறும் மாறுவதில்லை. ஆகையால், அலுமினியம் மற்றும் இரும்பு விலைகளை அடிக்கடி உயர்த்துவதற்கு எந்தவித நியாயமான காரணமும் கிடையாது. இவைகளின் அடாவடி விலையேற்றத்துக்கு ஒரே காரணம், இரும்பு நிறுவனங்களின் பேராசை. இரண்டாவதாக, அந்தப் பேராசையைக் கட்டுப்படுத்துவதற்குக் கூட்டுக் கமிட்டி போன்ற அரசாங்கத்தின் எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் பெரிய நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் பொருள்களின் விலையை நினைத்த நேரத்தில் கூட்ட முடிகிறது (அத்தகைய பெரிய நிறுவனங்களும் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளன). ஆனால், அவர்களுக்கு உதிரி பாகங்களைத் தயாரித்துக் கொடுக்கும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு அந்தப் பெரிய நிறுவனங்கள் விலை உயர்வை அனுமதிப்பதில்லை. ஆண்டுக்கு ஒருமுறை ஒப்பந்தம் என்று கூறி சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து பொருள்களைப் பெறுகின்றனர்.

பல நேரங்களில் மூலப்பொருள்களின் விலையேற்றத்தைக்காட்டி விலை உயர்வு கேட்டால் சிறுதொழில் நிறுவனங்கள் இழுத்தடிக்கப்படுகின்றன அல்லது அவர்கள் வேறு சிறுதொழில் நிறுவனங்களை நாடிச் சென்று விடுகின்றனர்.

அதேபோல, பல சிறுதொழில் நிறுவனங்கள் ஒரே முழுமையான நுகர்வுப் பொருளைத் தயாரித்து வருவதாலும், அவர்கள் தங்களது நிறுவனத்தை நடத்த வேண்டிய கட்டாயத்தினாலும் உற்பத்திச் செலவுக்கும் குறைவான விலைக்கு விற்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் அவர்களும் நஷ்டமடைகின்றனர்.

மின்வாரியம் போன்ற நிறுவனங்கள் சில பொருள்களுக்கு மட்டும் மூலப்பொருள்களின் விலைக்கேற்ற வகையில் கூட்டுவதற்கு அனுமதி தருகின்றன. அதுவும் மூன்று மாதத்துக்கு ஒருமுறை என்றால் காப்பர், இரும்பு, அலுமினியம் போன்ற பொருள்களின் விலையேற்றத்தை முழுவதும் பெற முடிவதில்லை. மற்ற பொருள்களுக்கு ஒப்பந்த விலை மட்டுமே தரப்படுகிறது.

மூலப்பொருள்களைப் பெரிய அளவில் ஆறுமாத காலத்துக்காவது வாங்கி வைக்கும் நிதி ஆதாரம் அநேகமாக சிறுதொழில்களுக்கு இல்லையென்றே கூற வேண்டும்.

ஒரே பொருளைத் தயாரிக்கும் சிறுதொழில் நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றுக்குத் தேவையான மூலப்பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அதேபோல சிறுதொழில்களிடமிருந்து உதிரிப் பொருள்களை வாங்கும் பெரிய நிறுவனங்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவு. அதனால் இந்த மூலப்பொருள் உற்பத்தியாளர், இறுதிப் பொருளை வாங்கும் பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையில் அகப்பட்டு சிறுதொழில் நிறுவனங்கள் கரும்பாகப் பிழியப்படுகின்றன.

மறைமுகப் பாதிப்பு: சிறுதொழில் நிறுவனங்கள் பெரிய நகரங்களான தொழில் மையங்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இவ்வாறு நகருக்கு அருகில் இருப்பதால் அவை தொழில் கூடங்களுக்குக் கூடுதலாக வாடகை தர வேண்டியுள்ளது. தொழிலாளர்களுக்குக் கூடுதல் ஊதியமும் கூடுதல் போக்குவரத்துச் செலவும் வாங்கிக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. இதன் காரணமாக மறைமுகப் பாதிப்பாக சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்திச் செலவு தவிர்க்க இயலாமல் உயர்கிறது.

இதற்கு முடிவுதான் என்ன?

சிறுதொழிலை வளர்ப்பது அவசியம் என்று அரசுக்கு உண்மையிலேயே எண்ணமிருந்தால் உடனடியாக அவர்கள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் தயாராகும் மூலப்பொருள்களுக்கு உரிய விலையை ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை அரசின் அனுமதி பெற்றே உயர்த்த வேண்டும். அரசு இதற்கான தனி குழுக்கள், அமைப்புகள் மூலம் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறைதான் வெளிநாட்டிலிருந்து மூலப்பொருள்களின் இறக்குமதிக்கு விலை நிர்ணயம் செய்யும் முறை உள்ளது.

பெரிய தொழில் நிறுவனங்கள் வழங்கும் கொள்முதல் ஆணைகளில் மூலப்பொருள்களின் விலையேற்றத்துக்கும் பிற காரணங்களின் அடிப்படையிலான விலை உயர்வுக்கும் ஏற்ற வகையில் விலையை இறக்கவும் வகைசெய்யும் நிபந்தனைகள் சேர்க்கப்பட அரசு சட்டம் இயற்ற வேண்டும்.

சிட்கோ, என்எஸ்ஐசி போன்ற நிறுவனங்கள் ஒரே சீரான விலையில் மூலப்பொருள்களை வாங்குவதற்குப் பெரிய அளவில் ஒப்பந்தம் போட்டு சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கலாம்.

முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் குடிசை மாற்று வாரியமும் பெரிய அளவில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டதன் விளைவாக தொழிலாளர்களுக்கு வாடகை வீடுகள் கிடைத்தன. இப்பொழுது அந்த இரண்டு நிறுவனங்களின் பணியில் பெரிய தொய்வு ஏற்பட்டுள்ளது. குறைந்த வாடகையில் தொழிலாளர்களுக்கு வீடுகள் கிடைக்க வழிகாண வேண்டும்.

போக்குவரத்தில் பெரிய அளவில் முன்னேற்றம் காண வேண்டும். மின்வண்டித் தொடரமைப்பு விரைவாக விரிவாக்கப்பட வேண்டும். சிறிய பேருந்து, வேன்கள் குறைந்த தூரத்துக்குப் பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதி வழங்க வேண்டும்.

**மானாவாரியில் பயனளிக்கும் தர்ப்பூசணி சாகுபடி**

நமது நிருபர்

First Published : 24 Mar 2011 01:49:23 PM IST

வேதாரண்யம்: கோடை வெப்பத்தின் தாகத்தைத் தணிக்க தர்ப்பூசணி பழத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தொடக்க நிலையில் நகர்ப்புறங்களில் மட்டுமே காணப்பட்ட இதன் விற்பனையை தற்போது ஊரகப் பகுதிகளிலும் காண முடிகிறது.

அனைத்து படர் கொடி வகை காய்கறிகளை விடவும், அதிக இரும்புச்சத்து உள்ள பழம் என்ற சிறப்பிடத்தை வகிக்கிறது தர்ப்பூசணி.

அதிக குளிர்ச்சியைத் தரும் இந்தப் பழத்துக்கு சந்தை வாய்ப்புகள் அதிகரித்து வருவதால், தமிழகத்தில் இதன் சாகுபடி பரப்பும் கூடி வருகிறது.

நல்ல வடிகால் வசதியுள்ள நிலத்தில் இதைச் சாகுபடி செய்யலாம். அடி உரமாக ஹெக்டேருக்கு தொழு உரம் - 20 டன், மணிச்சத்து, சாம்பல் சத்து முறையே - 55 கிலோ என்ற அளவில் இட வேண்டும். பி.கே.எம்.1, சுகர்பேபி, அர்கா மீனிக், அர்கா ஜோதி ஆகிய விதை ரகங்கள் நல்ல பலன் தருகின்றன. ஒரு ஹெக்டேருக்கு 3.5 கிலோ விதை போதுமானது.

பண்படுத்திய நிலத்தில் 2.5 மீட்டர் இடைவெளியில் கால்வாய்கள் அமைத்து, கால்வாயின் ஒரு பக்கத்தில் 6 அடி இடைவெளியில் கேப்டான் அல்லது திரம் நேர்த்தி செய்யப்பட்ட விதைகள் விதைக்கப்படுகின்றன. மேலுரமாக விதைத்த 30 நாள்களுக்குப் பின்னர் தழைச்சத்து 55 கிலோ இட வேண்டும். எத்ரல் வளர்ச்சி ஊக்கியைப் பயன்படுத்துவதால், அது மகசூலை அதிகரிக்கச் செய்கிறது.

குறைந்த அளவு பாசனம் போதுமானது. ஜனவரி - பிப்ரவரி ஏற்ற பருவமாகக் கருதப்படும் தர்ப்பூசணி 70 நாள்கள் முதல் 120 நாள்கள் வரை அறுவடை காலமாகும். ஹெக்டேருக்கு 25 முதல் 30 டன் வரை மகசூல் கிடைக்கும்.

மானாவாரிக்கு ஏற்றது: குறைந்த அளவு பாசன வசதியுடைய மானாவாரி நிலப் பகுதியிலும் தர்ப்பூசணியை சாகுபடி செய்யலாம்.

இதுகுறித்து தர்ப்பூசணி சாகுபடியில் ஈடுபட்டுள்ள பஞ்சநதிக்குளம் வை.ப. பார்த்தசாரதி

கூறியது: இந்தப் பகுதியில் சோதனை முயற்சியாக முதல் முறையாக கடந்த ஆண்டு ஒரு சில விவசாயிகள் தர்பூசணி சாகுபடி செய்தனர். பயனளிக்கும் வகையில் இருப்பதால், நிகழாண்டில் சுமார் 30 ஏக்கர் பரப்பில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

இங்கு சுசித்ரா, ரீயா, மகாராஜா போன்ற ரகங்களை விவசாயிகள் பயன்படுத்தியுள்ளனர். வாரத்துக்கு இரு முறை நீர்ப் பாசனம் செய்கிறோம்.

ஒரு பழம் சுமார் 3 கிலோ முதல் 10 கிலோ வரை எடையில் வருகிறது. நல்ல இனிப்பு சுவையுள்ளது. விற்பனை வாய்ப்புகள் அதிகரிக்க வகை செய்தால் சாகுபடி பரப்பு மேலும் அதிகரிக்கும்

என்றார் அவர்.

**ஆத்தூரில் வயல் தின விழா**

First Published : 24 Mar 2011 12:54:08 PM IST

திண்டுó௧கல், மார்ச் 23: திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டாரத்தில் ராஜராஜன் ஆயிரம் நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து வயல் தின விழா கொண்டாடப்பட்டது.

ஆத்தூர் வட்டாரத்தில் 2010-11 ஆம் ஆண்டிற்கு ராஜராஜன் ஆயிரம் நெல் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து வேளாண் துறை சார்பில் கொண்டாடப்பட்ட விழாவுக்கு, திண்டுக்கல் வேளாண் இணை இயக்குநர் ச.கணேசன், வேளாண் துணை இயக்குநர்கள் மு.தெய்வேந்திரன், ந.வி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஆ.ரமேஷ்பாபு, திண்டுக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலக வேளாண் அலுவலர்கள், வட்டார வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ராஜராஜன் ஆயிரம் நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி மரக்காயர் என்பவரது வயலில் நெல் ஏடிடி 45 ரகம் அறுவடை செய்யப்பட்டதில், ஹெக்டேருக்கு 13,250 கிலோ மகசூல் எடுக்கப்பட்டது.

விழாவுக்கான ஏற்பாடுகளை ஆத்தூர் வட்டார வேளாண் உதவி அலுவலர்கள் சேவியர், தம்புராஜ், சாகுல் அமீது ஆகியோர் செய்திருந்தனர்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**

நமது நிருபர்

First Published : 24 Mar 2011 01:48:04 PM IST

செய்யாறு: மணிலாவில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாண்டு விவசாயிகள் அதிக பலன் பெறலாம் என செய்யாறு கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி யோசனை தெரிவித்துள்ளார்.

பூச்சி கொல்லிகளை பயன்படுத்துவதால் பூச்சிகளின் எதிர்ப்புத்திறன் அதிகரித்தல், பூச்சிகளின் இனப்பெருக்கம் மீட்சி அடைதல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. இதற்கு மாற்றாக உள்ளது ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை. இதனால் சூற்றுச் சூழல் மாசு குறைகிறது. விஷமில்லாத தரமான உணவு கிடைக்கிறது.

உழவியல் முறைகள்:

கோடை உழவு செய்தல், பயிர் நன்கு செழித்து வளர ரைசோபியம் நுண்ணுயிர் கலந்து விதை நேர்த்தி செய்தல், விதைப்புக்கு முன் அடியுரம் இடுதல், சதுர மீட்டருக்கு 33 செடிகள் என பராமரித்தல், நீர் பற்றாக்குறை இல்லாமல் பராமரித்தல், உளுந்து, தட்டைப்பயிறு, துவரை, மணிலாவுடன் 1:4 என்ற விகிதத்தில் ஊடுபயிராக சாகுபடி செய்தல், ஆமணக்கு பயிரை ஓரப்பயிராக வைத்திருத்தல்.

கைவினை முறைகள்:

ஊடுபயிர் மற்றும் ஓரப்பயிர்களில் பூச்சிகள் இடும் முட்டை குவியல்களை சேகரித்து அழித்தல், புழுக்களை சேகரித்து அழித்தல், சுருள் பூச்சி, சிகப்பு கம்பளிப் புழு, படை புழு முட்டைகளை அழித்தல், இரவு 7-11 மணி வரை விளக்கு பொறிவைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழித்தல், சுருள் பூச்சி, சிவப்பு கம்பளிப் புழுக்களை அழித்தல், மழை நாள்களில் சொக்கப்பானையை கொளுத்துதல், சிகப்பு கம்பளி புழுவின் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழித்தல், இனக்கவர்ச்சி பொறி வைத்தல் - புரூடினியா ஆண் அந்துப் பூச்சியை கவர்ந்து அழித்தல் - ஏக்கருக்கு 5 எண்கள். மாலை நேரத்தில் நீல நிறத் துணிகளை பரவலாக வயல்களில் வைப்பதன் மூலம் புரூடினியா புழுக்களை கவர்ந்து அதிகளவு புழுக்களை அழித்தல், மொட்டுக் கருகல், வாடல் நோய் தாக்கப்பட்ட செடிகளை அப்புறப்படுத்துதல்.

உயிரியல் முறைகள்:

வைரஸ் கரைசல் தெளித்தல்: 1. புரூடினியா - என்.டி.வி. வைரஸ் நச்சுயிரி ஏக்கருக்கு 100 மி.லி. 2. சிகப்பு கம்பளி புழு - என்.பி.வி. வைரஸ் நச்சுயிரி ஏக்கருக்கு 300 மி.லி.

வேப்பம் பொருள்களைக் கொண்டும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். வேர் அழுகல் நோய், கழுத்து அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, டிரைகோடெர்மாவிரிடி - 4 கிராம் கொண்டு ஒரு கிலோ விதையை விதை நேர்த்தி செய்யலாம்.

பூச்சி மருந்துகள் உபயோகப்படுத்துதல்:

பவிஸ்டின் 2 கிராம் கொண்டு ஒரு கிலோ விதையை விதை நேர்த்தி செய்யலாம்.

சுருள் பூச்சி தாக்குதல்: ஏக்கருக்கு எண்டோசல்பான் - 300 மில்லி (அல்லது) டைகுளோரோவாஸ் 300 மில்லி ( அல்லது) மானோ குரோட்டோபாஸ் 300 மில்லி தெளித்தல்.

சிகப்பு கம்பளிப் பூச்சி தாக்குதல்: ஏக்கருக்கு எண்டோசல்பான் - 300 மில்லி (அல்லது) டைகுளோரோவாஸ்- 300 மில்லி (அல்லது) குளோரிவைரி பாஸ் 500 மில்லி தெளித்தல்.

புரூடினியா புழு தாக்குதல்: ஏக்கருக்கு எண்டோசல்பான் - 300 மில்லி (அல்லது) டைகுளோரோவாஸ் - 300 மில்லி தெளிக்கலாம்.

அசுவினி பூச்சி தாக்குதல்: ஏக்கருக்கு பென்தோயேட் - 300 மில்லி (அல்லது) மீனதல் டெமட்டான் - 250 மில்லி தெளிக்கலாம்.

துருநோய் தரம் - 3: ஏக்கருக்கு மான்கோசெப் - 400 கிராம் (அல்லது) கந்தகம் - 1 கிலோ தெளிக்கலாம்.

இலைப்புள்ளி நோய்: ஏக்கருக்கு மான்கோசெப் - 500 கிராம் (அல்லது) கார்பன்டாக்சிம் - 100 கிராம் தெளிக்கலாம்.

தினமலர்

**முட்டைக் கோழி விலை மேலும் உயரும் : மண்டல தலைவர் தகவல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 25,2011,02:13 IST

நாமக்கல்: "கறிக்கோழி விலையேற்றம் காரணமாக முட்டைக்கோழி விலை 31 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. முட்டைக் கோழி தேவை மிகுதியாக இருப்பதால், அதன் விலை மேலும் உயருவதற்கு வாய்ப்புள்ளது' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல சேர்மன் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் முட்டை விலை நிர்ணய ஆலோசனைக்குழு கூட்டம் மண்டல அலுவலகத்தில் நடந்தது. அதில், முட்டைக் கோழிக்கான தேவை தற்போது அதிகமாக உள்ளது. ஹைதராபாத்தில் இன்று ஒரு கிலோ முட்டைக்கோழி 32 ரூபாய்க்கும், ஹோஸ்பெட்டில் 33 ரூபாய்க்கும் விற்பனையாகி வருகிறது. மேலும், கறிக்கோழி 75 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது, முட்டைக் கோழி கேரளாவில் கிலோ 65 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், நாமக்கல்லில் முட்டைக்கோழி வியாபாரிகளின் தொழில் போட்டி காரணமாக, கோழிப் பண்ணையாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான விலை கிடைக்காமல், அதன் விலை நசுக்கப்படுகிறது. அதை எதிர்கொள்ள தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு, தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம், நாமக்கல் மண்டல முட்டை உற்பத்தியாளர்கள் சொசைட்டி மற்றும் நாமக்கல் கோழிப் பண்ணையாளர்கள் சம்மேளனம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அடங்கிய ஒரு உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டு, கோழிப் பண்ணையாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான முட்டைக்கோழி விலையை பெறுவதற்கு உரிய முறைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

எனவே, உரிய முட்டைக்கோழிக்கு விலை கிடைக்க முதல் வேண்டுகோலாக என்.இ.சி.சி.,யால் அறிவிக்கப்படும் முட்டைக்கோழி விலையிலிருந்து இரண்டு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை மட்டுமே குறைத்து விற்பனை செய்ய கோழிப்பண்ணையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எந்தக் காரணம் கொண்டும் மூன்று ரூபாயக்கு மேல் என்.இ.சி.சி.,யால் அறிவிக்கப்பட்ட முட்டைக்கோழி விலையிலிருந்து குறைத்துக் கொடுக்க வேண்டாம். முட்டைக்கோழி விலை 31 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், அதை 28 ரூபாயக்கு கீழ் விற்பனை செய்ய வேண்டும். வரும் நாட்களில் முட்டைக்கோழி தேவை அதிகரிக்கும் என்பதால், அதன் விலை உயர வாய்ப்புள்ளது. முட்டை விலை 210 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கறவை மாடுகள் விற்பனை உயர்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 25,2011,02:12 IST

ஈரோடு: ஈரோடு மாட்டுச் சந்தையில் கறவை மாடுகளின் விற்பனை நேற்று நன்றாக இருந்தது. ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை கூடுகிறது. இங்கு வாரந்தோறும் ஆயிரத்துக்கும் குறைவான மாடுகளே விற்பனைக்கு வரும். ஈரோடு மற்றும் அதன்

சுற்று வட்டாரப் பகுதியான சிவகிரி, மொடக்குறிச்சி, பொள்ளாச்சி, திருப்பூர், கோவை, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, ஜம்பை ஆகிய பகுதிகளில் இருந்து கறவை மற்றும் எருமை மாடுகளும் விற்பனைக்காக வருகின்றன.
ஈரோடு மாட்டுச் சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது: கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் ஏராளமானோர் நேற்று வந்திருந்தனர். வியாபாரம் நன்றாக இருந்தது. நேற்றைய நிலவரப்படி 500 சிந்து மாடுகளும், 250 எருமை மாடுகளும் விற்பனைக்காக வியாபாரிகள் கொண்டு வந்திருந்தனர். சிந்து இன மாடுகள் 14 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள் 12 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஊடுபயிரால் வருவாய் ஈட்டலாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 25,2011,02:02 IST

கோவை : "வருமானத்தை அதிகரிக்கும் வகையில், தென்னையில் ஊடுபயிர்களான காய்கறிகள், மூலிகை மற்றும் மணமூட்டும் பயிர்கள் உள்ளடங்கிய சாகுபடி திட்டங்களை உருவாக்க வேண்டும்' என, பல்கலை கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் பனைவகை பயிர்கள் குறித்த கருத்தரங்கு நடந்தது. பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா வரவேற்றார். துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்தார். காசர்கோடு, மத்திய மலைப்பிரதேச பயிர்கள் ஆராய்ச்சி நிறுவன முன்னாள் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஹமீதுகான் முன்னிலை வகித்து பேசியதாவது:எதிர்கால தேவைக்கேற்ப பனை வகை பயிர்களில் வலுவான ஆராய்ச்சி இன்றியமையாதது.

ஆண்டுதோறும் தென்னை பரப்பு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இருப்பினும், சராசரி தேங்காய் உற்பத்தி திறன் ஒரு மரத்துக்கு 78 காய்கள் என்ற குறைந்த அளவிலேயே உள்ளது. விளைச்சல், வருமானத்தை அதிகரிக்கும் வகையில், தென்னையில் ஊடுபயிர்களான காய்கறிகள், மூலிகை மற்றும் மணமூட்டும் பயிர்கள் உள்ளடங்கிய சாகுபடி திட்டங்களை உருவாக்க வேண்டும். தற்போதைய சூழலில் 25 கிலோ கொப்பரை அளிக்கும் உயர் விளைச்சல் ரகங்களின் தேவை மற்றும் இளநீர் பற்றாக் குறையை கருத்தில் கொண்டு, குட்டை வீரிய ரகங்களை உருவாக்க வேண்டும். காய்ப்பில்லாத, வயதான மரங்களை விவசாயிகள் அகற்றிவிட்டு, மாற்றாக வீரிய ஒட்டு ரக கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார். ஆடுதுறை, நெல் ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் ஜெயராஜ் நன்றி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**காய்கறிகள், பழங்கள் விலை உயர்வால் உணவு பொருள் பணவீக்கம் 10.05 சதவீதமாக உயர்ந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

காய்கறிகள் மற்றும் பழங்கள் விலை உயர்ந்ததையடுத்து, மார்ச் 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டில், உணவு பொருள் பணவீக்கம் 10.05 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 9.42 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து இரண்டு வாரங்களாக ஒற்றை இலக்க அளவில் இருந்த நாட்டின் உணவு பொருள் பணவீக்கம், தற்போது இரட்டை இலக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.

வெங்காயம்

நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசும், பாரத ரிசர்வ் வங்கியும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில் உணவு பணவீக்கத்தில் ஏற்பட்ட உயர்வு மத்திய அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம் (10.80 சதவீதம்) உருளைக்கிழங்கு (2.82 சதவீதம்) விலை

உயர்ந்துள்ளது. இதனையடுத்து காய்கறிகள் விலை 11.20 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் மற்றும் பால் விலை முறையே 23.60 சதவீதம் மற்றும் 6.63 சதவீதம் உயர்ந்துள்ளது. மீன், இறைச்சி, முட்டை ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 13.21 சதவீதம் உயர்ந்துள்ளது. அரிசி விலை 2.75 சதவீதமும் கோதுமை விலை 2.15 சதவீதமும் அதிகரித்துள்ளது.

பெட்ரோல்

உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 26.78 சதவீதம் உயர்ந்துள்ளது. இவற்றுள் கனிமங்கள் விலை 12.35 சதவீதமும், பெட்ரோல் விலை 23.14 சதவீதமும் அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் சென்ற பிப்ரவரி மாதத்தில் 8.31 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பாரத ரிசர்வ் வங்கி இம்மாதம் 17–ந் தேதி தாக்கல் செய்த கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை 0.25 சதவீதம் உயர்த்தியது. சென்ற ஓர் ஆண்டில் இந்த வட்டி விகிதங்களை எட்டுமுறை உயர்த்தி உள்ளது. நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் பொது பணவீக்கம் 7 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக உயரும் என ரிசர்வ் வங்கி அதன் ஆய்வு அறிக்கையில் மறுமதிப்பீடு செய்துள்ளது.

## வெங்காயம் ஏற்றுமதி விலை 225 டாலராக குறைப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வெங்காயம் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு 225 டாலராக (ஒரு டன்) குறைத்துள்ளது. இதனையடுத்து ஒரே மாதத்தில் ஏற்றுமதி விலை நான்கு முறை குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் உயர்வகை பிரிவைச் சேர்ந்த பெங்களூர் ரோஸ் மற்றும் கிருஷ்ணாபுரம் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 600 டாலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.வெங்காயம் உற்பத்தியில் உலக அளவில் நம்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. உற்பத்தி அதிகரித்ததையடுத்து சென்ற மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி மீதான தடை நீக்கப்பட்டது. பின்பு குறைந்தபட்ச ஏற்றுமதி விலையும் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலிருந்து தெற்கு ஆசிய மற்றும் வளைகுடா நாடுகள் அதிக அளவில் வெங்காயத்தை இறக்குமதி செய்கின்றன.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,780-2,800

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
3,450-3,500

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
7,350-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,425-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,780-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரிஉள்பட) 11,500-00
டின் (15 கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரிஉள்பட)
11,200.00
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,700-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரிஉள்பட) 1,135.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெ)
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,310.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,095.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
550-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மார்ச்.24-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,500 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(90கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மார்ச்.24-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 17915
2. ஜெயதார் 22 எம்.எ ரூ. ——
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 16,473
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 15,888
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 16,957
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 23,058
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,918

## எண்ணை மார்க்கெட்

கோவை,மார்ச்.24-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 84.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1160 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1420 | 1020.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,700 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,000 | 59.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,200 | 80.00 |
| வனஸ்பதி | | |
| வில்வி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | - |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தபட்ச விலை | அதிகபட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.400.00 | ரூ. 450.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 2.00 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.13.00 | ரூ.20.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.4.00 | ரூ.7.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.3.00 | ரூ.6.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.7.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.5.00 | ரூ.8.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.7.00 | ரூ.10.00 |
| மேராக்காய் | ரூ.5.00 | ரூ.8.00 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.231.00 | அதிகபட்சவிலை | ரூ.265.00 |
| சராசரி விலை | ரூ.125.00 | சராசரி விலை | ரூ.240.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.161.00 | குறைந்தபட்சவிலை | ரூ.215.00 |

**பட்டு நூல் ரூ.1,982**

## கோவை உழவர் சந்தை

கோவை,மார்ச்.24-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 54-00 | காலிப்பிளவர் | ரூ. | 13-14 |
| கத்தரிக்காய் | ரூ. | 18-20 | பொறியல் தட்டை | ரூ. | 16-17 |
| வெண்டைக்காய் | ரூ. | 10-12 | பச்சை மொச்சை | ரூ. | 28-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 12-10 | தேங்காய் | ரூ. | 13-00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6.50.7 | பட்டாணி | ரூ. | 44-46 |
| புடலை | ரூ. | 8-12 | பூண்டு | ரூ. | 130-00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18-20 | கறிவேப்பிலை | ரூ. | 30-32 |
| சுரைக்காய் | ரூ. | 8-10 | அகத்தி | ரூ. | 14-00 |
| பாகற்காய் | ரூ. | 14-15 | வாழைக்காய் | ரூ. | 14-00 |
| கொத்தவரை | ரூ. | 12-14 | திராட்சை | ரூ. | 36-00 |
| பூசணிக்காய் | ரூ. | 16-18 | திராட்சை (பச்சை) | ரூ. | 60-65 |
| அரசாணிக்காய் | ரூ. | 8-10 | குடைமிளகாய் | ரூ. | 36-00 |
| மேராக்காய் | ரூ. | 16-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 16-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18-20 | டபுள்பீன்ஸ் | ரூ. | 30-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20-00 | கறிபீன்ஸ் | ரூ. | 22-24 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16-18 | புஸ்பீன்ஸ் | ரூ. | 26-27 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10-00 | காளான் | ரூ. | 80-140 |
| இஞ்சி | ரூ. | 32-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-00 | சப்போட்டா1கிலோ | ரூ. | 15-16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 15-16 | கொய்யா1கிலோ | ரூ. | 22-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20-00 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-16 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | ஆப்பிள் | ரூ. | 115-00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | சாத்துக்குடி | ரூ. | 28-30 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | நெல்லிக்காய் | ரூ. | 30-00 |
| முள்ளங்கி | ரூ. | 9-12 | ஆரஞ்சு | ரூ. | 45-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24-00 | வெள்ளரி | ரூ. | 10-12-26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 7-8 | புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| நூல்கோல் | ரூ. | 16-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-00 |
| கொத்தமல்லி | ரூ. | 16-18 | அவரை | ரூ. | 10-11 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16-00 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 8-10 | மக்காச்சோளம் | ரூ. | 18-00 |
| கலர்கோஸ் | ரூ. | 10-16 | தர்பூசணி | ரூ. | 10-00 |
| புதினா | ரூ. | 16-00 | சித்தாபழம் | ரூ. | 20-00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21700 |
| மிளகு (சேட்டன்) | ரூ.22100 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22700 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 8500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 8550 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1250 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9550 |
| கொப்பரை நாடன் | ரூ.6475 |
| கொப்பரை ராசு | ரூ.6375 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6600 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.6900 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6350 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22400 |
| ரப்பர் பால் | ரூ. 14000 |
| காப்பி | ரூ. 5500 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 1400 |
| நேந்திரகாய் | ரூ. 1350 |
| இஞ்சி | ரூ. 1400 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,656.00 | 15680.00 | 15680.00 |
| ஒரு கிராம் | 1,957.00 | 1,954.00 | 1,960.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 59,910.00 | 60,300.00 | 60,000.00 |
| ஒரு கிராம் | 59.80 | 60.30 | 60.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**மஞ்சள் (கோவை)**

| | |
|---|---|
| தனிவிரலி | ரூ.9509-1100 |
| தனிகிழங்கு | ரூ.8819-9819 |

**மக்காய்ச்சோளம்**

| | |
|---|---|
| உடுமலை | ரூ.1150-1170 |
| பெதப்பம்பட்டி | ரூ.1040-1050 |

**தேங்காய்**

| | |
|---|---|
| மடத்துக்குளம் | ரூ.500-600 |
| நெகமம் | ரூ.500-1000 |
| பொள்ளாச்சி | ரூ.500-1000 |